1980 பிப்ரவரி 6]

திரு. என். கிட்டப்பா: பாண்டிச்சேரி மாநிலத்திலுள்ள அரியூரில் இருக்கும் ''நியூ ஹொரைசன்'' என்ற நிறுவனம் தமிழக அரசுக்கு எவ்வளவு தொகை நிலுவை தர வேண்டியிருக்கிறது? அது இன்னும் வசூலிக்கப்படாமைக்குக் குறிப்பிட்ட தடங்கல் ஏதேனும் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: நியூ ஹொரைசன் சர்க்கரை ஆலையிலிருந்து ரூ. 25,15,543.74 காசு வர வேண்டியிருக்கிறது. 1975–76, 1976–77, 1977–78 ஆகிய மூன்று ஆண்டுகளில் மட்டும் இந்த நிலுவை பாக்கி நிற்கிறது. சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி செய்யக் கூடிய சர்க்கரைக்கு சரியான விலை வெளி மார்க்கெட்டுகளில் கிடைக்காததன் காரணமாக இந்த வரியை அவர்கள் செலுத்த முடியவில்லை. அதனால் இந்த அரசாங்கத்தின் மூலம் ''ஸ்டே'' கொடுக்கப்பட்டு அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

கொல்லிமலையில் பழ ரசத் தொழிற்சாலை.

*வினா எண். 77— திரு. வ. சின்னசாமி: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கொல்லிமலையில் கிடைக்கும் பழவகைகளைப் பயன்படுத்தும் வகையில் அங்கு ஒரு பழரசத் தொழிற்சாலை அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:— கொல்லிமலைப் பகுதியில் பழரசத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

திரு. என். பழனிவேல்: இந்தப் பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலையை என்னுடைய தொகுதி ஆயக்குடி பகுதியில் பழம் அதிகமாக உற்பத்தியாவதால் அங்கு அமைப்பதுபற்றி அரசு ஏற்கனவே பரிசீலித்துக் கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. அந்த முடிவு என்னவாயிற்று? அங்கு பழரசத் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முற்படுமா?

மாண்புமிகு கே. இராஜா முகமது: இந்திய அரசின் உணவு மற்றும் சத்துணவுக் கழகத்தின் ஆலோசனைப்படி நாள் ஒன்றுக்கு 100 மெட்ரிக் டன் தக்காளிப்பழம், 10 மெட்ரிக் டன் மாம்பழம், 10 மெட்ரிக் டன் அன்னாசிப் பழத்தைப் பதப்படுத்தும் தொழிற்சாலையை நிறுவலாம் என்று உத்தேசித்திருந்தார்கள்.

இவற்றை எப்படி விற்பனை செய்வது என்ற பிரச்சினை காரண மாக ஒரு கோடி 30 லட்சம் செலவில் மதுரை மாவட்டத்தில் நிறுவலாம் என்று செய்திருந்த முடிவை மாற்றி 40 லட்சத்திற்கு மேல் போகாமல் ஒரு தொழிற்சாலையை பழங்கள் கூடுதலாகக் கிடைக்கக்கூடிய பழனி—பெரியகுளம் பகுதியில் ஏதாவது ஓரிடத்தில் நிறுவலாம் என்று அரசு யோசித்து வருகிறது. அது விரைவில் செயல் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9–50]

திரு. எம். எம். ஏ ரசாக்: தலைவர் அவர்களே, புதிதாக பழரசத் தொழிற்சாலை மதுரை மாவட்டதில் ஏற்படுத்தப் போவ தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய நெல்லை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் மாங்காய் அதிகமாக இருக்கிற காரணத்தினால் அங்கே அதை வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்விகள் கூடுமானவரையில் மூலக் கேள்வியை ஒட்டியதாகவே இருக்க வேண்டும். கொல்லிமலை சம்பந்தப்பட்ட கேள்விதான் அது. திரு. பழனிசாமிக்கு அனுமதித்ததால் ஏற்பட்ட நிலை அது. மூலக் கேள்வியை ஒட்டித்தான் கேட்கவேண்டுமே தவிர தமிழகத்திலே உள்ள அத்தனை இடங்களைப் பற்றியும் கேட்பது தவறு.

பழனி தாலுக்காவில் பால்வள அபிவிருத்தித் திட்டம்.

*வினா எண் 78— திரு. எஸ். ஜே. இராமசாமி; மாண்புமிகு கிராமத்தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1979–80 ஆண்டில் மதுரை மாவட்டத்தில் பழனி தாலூக்காவில் பால்வள அபிவிருத்தித் திட்டம் புதிதாக ஏற் படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது; (அ) ஆம்.

(ஆ) பழனி, திண்டுக்கல் பகுதிகளில் பால் உற்பத்தி சங்கங்களின் எண்ணிக்கையைப் பெருக்கும் கருத்துரு தமிழ்நாடு பால்வள நிறுவனத்திற்கு உள்ளது. கால்நடை மருத்துவம் மற்றும் செயற்கை முறை கருவூட்டல் ஆகிய வசதிகள் இப் பகுதிகளில் ஏற்படுத்தப்படுகின்றன. மேலும் உறைவிந்து நுட்ப திட்டம் இப் பகுதிகளில் ஏற்படுத்தப்படும்.